# விளம்பரம்™

VLAMBARAM™

☎ : 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 11 JUNE 01, 1999



வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎ : 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



✲ புதிய வீடு வாங்குவது சிறந்ததா? (பக்.13)

✲ சிவாஜியின் வெற்றிக்கு காரணம் என்ன? (பக்.7)

✲ இலங்கை கிரிக்கட்டில் சிறந்த நாடா? (பக். 6)

✲ தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்குமா? (பக். 5)





இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

சபோனாவிற்கு!

CANTEL, AT & T, clearNET, Bell Mobility

FREE UNLIMITED TALKTIME EVENING & WEEKENDS

Tel: (416) 264-8787 / 269-8151

Markham & Eglintion

(கலைமகள் புத்தக நிலையத்திற்குள்ளே)



✲ வாகனம் செலுத்தும் போது அவதானிக்க வேண்டியவர்கள் (பக். 10)

✲ யோகாசனத்தால் சுயகட்டுப்பாட்டை அதிகரிக்கலாமா? (பக் 4)

✲ "கொம்பியூட்டர் வைரசு" கொம்பியூட்டரை மட்டும் பாதிக்கின்றது (பக். 2)

✲ இருகிரகங்கள் மோதுவதால், புதிய கிரகம் தோன்றலாமா? (பக்கம் 09)




## ஈழத்துச் சிவயோக சுவாமிகள் அருளிய மணிமொழிகள்

*தொகுத்தளிப்பவர்: ஆசிரியர் - தம்பிப்பிள்ளை பாலசுப்ரமணியம்*

- மணம் ஒடுங்கல் வேண்டும்
- கடவுள், ஆன்மா, உலகம் ஈற்றில் உலகமும் கடவுள் மயமாய்விடும்.
- உள் கதவிருக்க வெளிக்கதவுக்கு ஏன் போவான். உள்ளுக்குள் தான் எல்லாம் இருக்கின்றது.
- ஆன்மா தான் திருவருட்பயன்
- ஒரு அவுக்கு மேலே போனால் அப்பாலே அது இழுத்துப்போடும்.
- ஒரே கடவுள், ஒரே சமயம், ஒரே ஆட்கள்

## உலகக் கோலங்கள்

**கனடா (தொடர்ச்சி)**

இந்த இதழில் உலகக் கோலத்தை அலங்கரிக்கும் நாடும் கனடாவே. மாகாணங்களாகவும், பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்படும் நாடு-கனடா ஆகும். கனடாவில் மூன்று வகை அரசுகள் காணப்படுகின்றன. மத்தியஅரசு, மாகாண அரசு, மாகாண சபை அரசு. மாகாண அரசை ஆட்சி செய்பவரை முதலமைச்சர் (Premier) எனவும், நாட்டின் தலைவரை அல்லது ஆட்சி செய்பவரை பிரதம மந்திரி (பிரமைா மினைசைதார) என அழைக்கப்படும், இருந்த போதிலும் கனடாவின் இராஜ்ஜ தலைவராக மாட்சிமை பொருந்திய எலிசபெத் மகாராணி II காணப்படுகின்றனர். கனடாவின் வடக்குப் பக்கத்தில் எந்த நாடுகளும் இல்லை, ஆகையால் தெற்கு பக்கத்தில் உள்ள நாடு அமெரிக்கா ஆகும்.

கனடாவைச் சுற்றி மூன்று பக்கத்திலும் 3 சமுத்திரங்கள் காணப்படுகின்றன. மேற்கில் பசுபிக் சமுத்திரம், கிழக்கில் ஆர்ட்டிக் சமுத்திரம் காணப்படுகிறது.

*(தொடர்ச்சி 8ம் பக்கம்)*

## உன்னை அறிந்தால்........

அபிப்பிராயம், ஆக்கம், செயல்பாடு இவை ஒவ்வொருவரினதும் சூழலிற்கு ஏற்ப மாறுபடும்; இருந்தும் சிலர் தன்னிச்சையாக, வித்தியாசமாக சிந்திப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றது.

காலம் ஒரு தேவை. எந்த தேவை, எந்த நேரத்தில் தேவைப்படுகின்றதோ, அதனைப் பாவித்து வெற்றி பெறுவதே அறிவு. அறிவு என்பது அறிந்ததைப் பாவிப்பது. படித்து ஒருவன் பட்டம் பெறுகிறான் என்றால் பட்டம் அல்ல அவன் பெற்ற தகுதி. அந்தப் பட்டத்தைப் பெற அவன் காலம் காலமாக செலவழித்துப பெற்ற அறிவு, அதனூடாக பெற்ற அனுபவமே சிறந்தது.

100 மீற்றர் ஓட்டப்போட்டி நடக்கும் நேரம் சில செக்கன்களே. ஆனால் அந்தச் செக்கன்களிற்கு ஓடுகிறபவன் எவ்வளவு காலமாக அப்பியாசம் செய்து, ஆண்டுகளிற்கு மேலாக செலவு செய்திருப்பான்.

எனவே ஒருவிடயத்தில் வெற்றி பெற ஒருவன் செலவழித்த காலம், அதனால் பெற்ற அனுபவம், திறமை, செயல்பாடு அதுவே அவன் பெற்ற வெற்றியாகும். வெற்றியை நோக்கிய பிரயாணத்தில் பெற்ற திறமையே அவன் பெற்ற வெற்றியை விட சிறந்தது. விதிவிலக்குகள் விலக்கப்பட வேண்டும். எனவே முயற்சி திருவினையாக்கும். தொடர்ந்த முயற்சி , தளர்வடையாத மனம், தோல்வியைக் கண்டு ஓடுதல் இல்லாத முயற்சியே வெற்றியின் ஏணிப்படிகள்.


CTBC

C.T.B.C ✡ மென்மையான நட்பு ✡ அந்திப்பூக்கள் ✡ HOUSEFULL ✡ யூன் 5, 1999



SINGAPORE CELLULAR

Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE

Call Display, Call Waiting FREE, Per Second Billing

For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978




# அறிவும் ஆக்கமும் (35)

- விஜே குலத்துங்கம்

சில வாரங்களுக்கு முன்னர் Computer உலகத்தையே, முக்கியமாக Melissa என்ற வைரசும், CIH என்ற வைரசும் ஒரு கலக்கு கலக்கி விட்டன. முதலில் இந்த Computer Virus என்றால் என்ன என்று பார்ப்போம். எங்களுக்கு நன்கு தெரிந்த Virus ஆனது மனிதர்களில் நோயைத் தோற்றுவிக்கும் ஒரு நுண்ணுயிர்க் கிருமியாகும். கண்ணுக்கு தெரியாத இந்த கிருமியானது, மனிதரிலிருந்து மனிதருக்கு வெகு விரைவாகப் பரவி நோய்களை உண்டாக்கும். இது இயற்கையில் காணப்படும் ஒரு கிருமியாகும்.

Compter Virusம் இதேபோன்று Computer இலிருந்து Computerக்கு விரைவாகப்பரவி, அவற்றைப் பழுதாக்குகின்றது. ஆனால் இந்த வைரசு ஆனது மனிதனால் உருவாக்கப்படும் ஒன்றாகும். நன்கு Computer Program எழுதக் கூடியவர்களால் எழுதப்பட்ட நாச விளைவுகளை விளைவிக்கக் கூடிய ஒரு Programமே இந்த Virus ஆகும். ஒரு Computer Software அதாவது word, Excel, Lotus போன்றவை ஒரு Programmerஆல் ஒரு Programஆக எழுதப்படுகின்றது. அதேபோல்தான் இந்த Virusம் Program ஆக எழுதப்படுகிறது. இந்த Virus க்குரிய Programஐ எழுதுவது மிகவும் சுலபம். ஒரு திறமையான Programmer 6 மணித்தியாலங்களில் ஒரு Virus Programஐ எழுதலாம். ஆனால் இந்த Virusஐ பரவச் செய்வது கடினம்.



இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் Internet பிரபல்யமாக இருக்கவில்லை. அந்தக் காலப்பொழுதில் ஒரு மின்கணணியும் மற்றைய மின்கணணிகளும் இணைக்கப்பட்டு இருக்கவில்லை. எனவே Virus ஆனது ஒரு மின்கணணிக்கு தொற்றும் வேகம் அல்லது சந்தர்ப்பம் குறைவாக இருந்தது. அந்தக் காலங்களில் Computer Games கம்பியூட்டர் விளையாட்டுகள் அடங்கிய Diskette ஐ உருவாக்கும் பொழுது, விஷமிகள் இதனுள் Virusஐ புகுத்தி விடுவார்கள். இந்த Disketteஐ Computerல் உபயோகிக்கும்பொழுது. அதன் Memoryன் உள்ளே இந்த Virus சென்று தன்னை பல நூற்றுக்கணக்காக பிரதியிடுக் கென்று பல files இனுள்ளும் புகுந்து விடுகின்றது. பின்னர் இந்த மின்கணணியில் ஏதாவது Disketteஐ உபயோகிக்கும் போது அதனுள் வைரசு புகுந்துவிடும். இதே Disketteஐ வேறு கணணியில் பாவிக்கும் பொழுது அந்தக் கணணியினுள்ளும் புகுந்து முன்னரைப் போன்றே செயல்பட்டு பல்வேறு கணணிகளுக்கும் புகுந்து விடுகின்றது. ஆனால் பாவனையாளர்கள் கவனமாக இருந்தால் இதனைத் தடுக்கலாம். அதாவது வேறு Disketteகளை பாவிக்கும் பொழுது, Virusக்குரிய தடுப்பு முறைகளைப் பாவித்தால் இதனைத் தவிர்க்கலாம்.

ஆனால் தற்போது Internet பரவலாக, எல்லா மின்கணணிகளாலும் உபயோகப்படுத்தப்படுகின்றது. இது எங்கள் மின்கணணியின் கதவுகளை திறந்து விட்டு யாரும் வரலாம் என்ற நிலைக்கு ஒப்பானது. முக்கியமாக E-Mail என்ற மின்அஞ்சல்களை உபயோகிக்கும்போது, உங்களுக்கு E-Mail மூலம் ஒரு வைரசுவை உங்களுக்கு அனுப்பலாம். இதேமுறையில்தான் Melissa வைரசு பரவியது. இந்த Melissa வைரசு ஆனது இன்று அநேக நிறுவனங்களால் உபயோகிக்கப்படும் Microsoft நிறுவனத்தில் outlook எனப்படும் E-Mail மூலம் பரவப்பட்டது. இந்த வைரசு ஆனது E-Mail மூலம் அனுப்பப்படும் பொழுது, பாவனையாளருக்கு ஒரு E-Mail ஆனது உங்களுக்கு தெரிந்த ஒருவரிடமிருந்து வருவதாகவே அதன் விலாசம் தெரிவிக்கும். அதில் "முக்கிய செய்தி", உன்னால் தரும்படி கேட்கப்பட்ட ஆவணம் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது என அந்த E-Mail தெரிவிக்கும். அதனுடன் Attachement என்ற முறையில் இணைக்கப்பட்ட Microsoft Wordன் Documentஐ நீங்கள் திறக்கும் பொழுது அதனுடன் உங்களுக்கு தெரியாமல் அனுப்பப்பட்ட 'Macro' என்று சொல்லப்படும் சிறு கட்டளைத் தொகுதியொன்று, தன் வேலையை ஆரம்பிக்கும். முதல் வேலையாக உங்களுடைய Mailing Listல் உள்ள முதல் 50 பெயர்களுக்கு நீங்கள் அனுப்புவது போன்று, இதே Virus உள்ள E-Mailஐ அனுப்பிவிடும். இப்படியாக 50, 50 ஆக தொடர்ந்து செல்லும் பொழுது, மிக அதிகளவில், E-Mail Serverஐ இந்த E-Mailsகள் சென்றடையும் போது, இந்த E-Mail System செயலிழந்து போகலாம்.

இதனால் இந்த E-Mailகளையே நம்பியிருக்கும் பெரிய வியாபார ஸ்தாபனங்களின், வியாபாரங்கள் ஸ்தம்பிதம் அடைந்து பெரிய நட்டம் ஏற்படும். ஆனால் நல்லவேளையாக ஒரு வெள்ளிக் கிழமையே இதைப்பற்றி கண்டறிந்து, வார இறுதி நாட்களில் இராப்பகலாக வேலை செய்து இது பரவாமல் தடுத்து விட்டார்கள். ஆயினும் இதற்காக பல மில்லியன் டொலர்கள் செலவானது. இந்த Virusஐ உருவாக்கிய 30 வயதுடைய David L. Smith என்ற Programmer க்கு 40 வருடங்கள் வரை சிறைத் தண்டனை கிடைக்கலாம்.

இதேபோன்ற இன்னொரு வைரசு CIH 1.2 ஆனது Chen Ing-Hau என்ற தாய்வான் நாட்டுக்கார Compute r Engineering மாணவரால் உருவாக்கப்பட்டது. Mellissa வைரசு, Computerஐ பாதிக்கவில்லை. ஆனால் CIH ஆனது bssic Input/Output system எனப்படும் computer ன் Biosஐ பழுதாக்கிவிடுவதால், மின்கணணி இயங்காமல் விட்டுவிடும். இந்த வைரசு மேற்கு நாடுகளை பாதிக்கவில்லை ஆயினும், கிழக்காசிய நாடுகளை பாதித்து பல இலட்சம் மில்லியன் டொலர் நட்டத்தை ஏற்படுத்தியது.

இந்த வைரசுகளை எவ்வாறு தடுக்கலாம். முதலாவதாக தெரியாதவர்களிடம் இருந்து வரும் Virus களை திறக்கக்கூடாது. தெரிந்தவர்களிடமிருந்து வரும் சந்தேகத்துக்குரிய முறையில் இருக்கும் E-Mailகளையும் திறக்கக் கூடாது. அத்துடன் Internet இலுள்ள சில Wev pagesல் உள்ள சில Files களை அல்லது வேறு ஆவணங்களை Download செய்யும் பொழும் தகுந்த Virusscan Programகளை பாவித்து, Virusஐ அகற்றி Download செய்ய வேண்டும். தேவையில்லாத பக்கங்களுக்குச் செல்லக் கூடாது. ஆனால் எவ்வளவு கவனம் எடுத்தாலும், புதிய புதிய வழிகளை இந்த Computer விஷமிகள் கண்டுபிடித்து வருகின்றார்கள். எப்படி Aids போன்ற புதிய வைரசு நோய்கள் மனிதனில் தோன்றுகின்றதோ, அப்படியே Computer வைரசுகளும் மனிதனால் தோற்றுவிக்கப்படுகின்றது. நாமும் அதற்கேற்ப எங்களால் முடிந்த முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

*********************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


10 வருடங்களாக தமிழர் மத்தியில்


யோகாஸ்

☎ :(416) 267-0408

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்

YOGAS
615 KENNEDY RD.
Scarborough, Ont.


குறுக்கு எழுத்துப் போட்டி இல. 96



**இடமிருந்து - வலம்**

1. வாழுமிடம்
2. பார்
3. ஏங்கு (வல-இட)
4. தாராளமாக கொடுத்தல்
7. தாமதம் (வல-இட)
8. பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் இடம்
9. அடைமானம்
10. மேல் மாடம்
12. தாங்கு (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. புல் செருக்கும் கருவி
2. அன்பு
5. துணை (கீழ் - மேல்)
6. உருகச் செய்
8. மாம்பிஞ்சு
9. கொடை
10. தோன்று (கீழ் - மேல்)
11. தொண்டு (கீழ் - மேல)
12. வெள்ளி (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் June 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.




#95இல் வெற்றி பெற்றோர்
1) S. Ragavan, Toronto
2) M. Hamsavaani, NorthYork

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. ( MIDLAND & LAWRENCE )

☎ [416] 285-4998



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



*>Railing > Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## யாதும் ஊரே யாவரும் கேளிர்



(18) **-கலகலப்பு தீசன்-**

* ஒரு பிறப்பை சற்று அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இறப்பை... அறியமுடியாது. எந்த நிமிடத்திலும் நடக்கலாம். அது போலவே, சட்டப்பிரச்சினைகளும், விபத்தும். சண்டை வேண்டாம், ஒற்றுமை வேணும் எனும் போதனைகளைத் தரும் இராமாயணம், பாரதம் கூட சண்டைகளை, உருவாக்கி இறுதியில், நல்ல முடிவைக் கொடுக்கின்றன. வாகன விபத்துக்கள் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகின்றன.

* இரவு வேலை செய்து விட்டு வரும் போது தூக்கத்தில் காரை மோதிவிட்டேன்.

* எனது சொந்தக்காரப் பையன் கிட்டடியில் தான் கனடா வந்தார், ஆசைப்பட்டார் எனது காரை ஓடக் கொடுத்தேன்.

* லைசென்ஸ் இல்லை, கார் அடிபட்டுப் போச்சு,... என்ன செய்வது?

* நண்பர் கேட்டார் Rent கார் எடுத்துக் கொடுத்தேன்,... அவரின் பெயர் சேர்க்கவில்லை கார் அடிபட்டு விட்டது. இப்படி எத்தனைபேர் கதைப்பதைக் கேட்டிருப்பீர்கள். தினம் தினம், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் நடைபெறுகிறது.



* அன்று யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் சுவீப் ரிக்கற் விற்றவர் சொல்வது ஞாபகம் உண்டா?

* போனால் 50 சதம் வந்தால் ஒரு லட்சம். போனால் 1 போத்தல் பால்காசு என்று சொல்வது போல அதிஸ்டம் எப்போதாவது வரலாம். ஆனால் விபத்து எப்பொழுதும் வரலாம்.

குடிபோதையில், காரோட்டி... (Over Speed) கூடிய வேகத்தில், காரோட்டி கவலையீனமாக காரோட்டி, வாகன விபத்தைச் சந்தித்து, வாகனத்தை, இழந்து, அங்கங்களை இழந்து ஏன், உயிரையே இழப்பவர் தினம் தினம் எத்தனை பேர்.

*ஆங்கிலம் மட்டும் தெரிந்தால் போதாது சில சட்டமுறைகளையும் தயவு செய்து அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

### குடிமகனே!... பெருங்குடிமகனே!....

**நீதி:** நீர் குடிபோதையில் காரோட்டி இதோ உம் எதிரில் நிற்பவரை.. மோதியிருக்கிறீர். அதிஸ்டவசமாக அவர் இறந்திருந்தால்...

**குற்றவாளி:** இப்போ.... சாட்சி சொல்ல வந்திருக்கமாட்டார். ***-கலகலப்பு தீசன்-***


*We are entering 5 th year service in Scarborough.*



## Better Work ...
## Less Money

**N.T.E** *Auto* Inc.
New Trade Engineering

We service
EUROPEAN , JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஓட்டோ இங்.**

**AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN






## HINDUISM INTO AND BEYOND THE MILLENNIUM

**Can Hindusim, an ancient religion, meet the challences of modern society?**

**Many Hindus, especially Youth, are asking if their Religion can provide answers for the increasing complex challenges of modern society**

**Would you like to know the answers to these questions?**

**Please come for an Interactive Session with**

**Mr. Jegadeesan of Malaysia** At

**WINSTON CHURCHILL COLLEGIATE**
**2239 LAWRENCE AVE. EAST (LAWRENCE/KENNEDY)**
**SCARBOROUGH, ON.**
**SATURDAY JUNE 5TH, 1999 - 9:30AM -6:00PM**
**SUNDAY JUNE 6TH, 1999 - 1:00PM - 6:00PM**

**All are welcome.**

**Tradition Religion Aspiration Culture**

# ஆரோக்கிய வாழ்வு (34)



- *N.* செல்வசோதி

## YOGA AND SEX

### யோகாசனத்தின் மூலம் யோகம் போகத்திற்கு எவ்வாறு உதவும்

யோகாசனம் உடலை, நரம்பை, மனதை பலப்படுத்துகிறது. உடல் சக்தியையும், மன உறுதியையும் நம்பிக்கையையும் வளர்க்கிறது. உடல் உறுதி பெறுவதால் கலவியலில் நன்கு ஈடுபடமுடிகிறது. யோகாசனம் பயிற்சிக்கு வயது வரம்பு கிடையாது. அவரவர் தேவைக்குத் தகுந்தபடி ஆசனங்களை மேற்கொள்ளலாம். யோகாசனப் பயிற்சி மேற்கொள்பவர்கள் வயதான காலத்திலும் இளைஞர்களுக்கு ஒப்ப கலவியலில் ஈடுபட முடியும்.

யோகாசனம் சரீரத்திலுள்ள வேண்டாத சதைகளை அகற்றி உடலை அழகுறச் செய்கிறது. பொதுவாக பாலியலில் திருப்தியடைவதற்கு உடல் அமைப்பும் இன்றியமையாதது. கணவனும் மனைவியும் ஊளைச்சதை நிறைந்த சரீரமுடையவர்களாயிருப்பின் அவர்களால் பூரணமான பாலியல் இன்பத்தை அடையமுடியாது. ஆனால் இந் நேரத்தில் யோகாசனம் அவர்களது சதையைக் கெட்டிப்படுத்தி நரம்புகளை உறுதிப்படுத்தி முறுக்கேறச் செய்கிறது. எனவே யோகாசனம் பயில்பவன் தனது மனைவியைப் பூரணமாகத் திருப்திப்படுத்த முடியும்.

யோகாசனம் என்பது திடீரென்று அருந்தும் Instant கோப்பி போன்றது அல்ல உடனடியாக உடலில் மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு. அதனை தொடர்ந்து பயிற்சி செய்து வரும் போதுதான் பாலுணர்வு கேந்திரங்களை வலுவடையச் செய்து விந்து துரிதமாக வெளியேறுவதைத் தடுத்து நெடுநேரம் இன்பத்தை அனுபவிக்க அவனைத் தயார்ப்படுத்துகிறது. அத்துடன் அவனிடம் ஆண்மையற்ற தன்மை ஒருபோதும் இருக்காது.

யோகாசனம் உடல் நலத்தையும் நோய் எதிர்ப்பு சக்தியையும் வளர்க்கிறது. இதனால் பாலுணர்வை நீங்கள் அடக்கி ஆள முடியும் அன்றி அது உங்களை அடக்கி ஆளமுடியாது. உணர்ச்சிகள் உங்களை அடக்கி ஆள முடியாத போது யோகா பாலுணர்வை உணர்ச்சி பூர்வமாக தெய்வீகத் தன்மையுடன் வழிப்படுத்துகிறது. அத்துடன் உங்கள் தீய எண்ணங்களை உங்கள் புற மனதிற்கு அனுப்பமாட்டீர்கள் அதற்குப் பதில் அவற்றை விலக்கி விடுவீர்கள் இதனால் முறை தவறி நடக்கத் தூண்டும் பாலுணர்வு எண்ணங்களை மனதிலிருந்து விடுவிக்க முடியும். யோகத்தால் மனதிற்கு கிடைக்கும் நன்மைகள். மனதால் பாலுணர்வு கிடைக்கும் நன்மைகளை பெருகுகிறது. இதுதவிர யோகம் சுய கட்டுப்பாட்டை வலுப்படுத்துகிறது.

உடல் உறவில் பல முறைகள் யோகாசனத்தை ஒத்துள்ளன. உடலும் உள்ளமும் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பது யோகமும், போகமும்தான். மத்திய வயதுடைய் தம்பதியினர் பாலியல் உறவில் சில கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர் ஆனால் யோகாசனப் பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு எந்தவிதமான கட்டப்பாடுகள் தேவையில்லை. ஒரு பிரச்சினையும் எழுவதில்லை.

எனவே கீழ்வரும் ஒரு சில ஆசனங்கள் மட்டும்.

(பட்ஷ மொத்தாசனம்) Forward Bent
(ஹலாசனம்) Plough
(தனூராசனம்) Bow,
(சர்வாங்க ஆசனம்) Shouldr stand
(மச்சாசனம்) Fish

இவற்றை தினமும் குறைந்த பட்சம் 20 நிமிடமாவது பயிற்சி செய்து வரவேண்டும். இத்துடன் சாந்தி ஆசனத்தில் இருக்கும்போது உங்கள் எண்ணங்களை ஒருமுகப்படுத்தி பாலுணர்வு சம்மந்தப்பட்ட உறுப்புக்களின் மீது திணித்து சுய வசியமுறையில் (Auto Suggestion) அவைகள் வலுப்பெறுவது போலவும் மிகுந்த ஆரோக்கியம் பெறுவது போலவும் மனதில் திரும்பத் திரும்ப நினைத்து வரும் போது அது கருத்தேற்றம் முறையில் மூளைக்கு அனுப்பப்பட்டு அது அவ்வுறுப்புக்களை புத்துணர்வு பெறச் செய்கிறது நாளடைவில் பாலுணர்வு சம்மந்தப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியும்.

அடுத்த இதழில் யோகத்தில் முழுமையும் போகத்தில் முதிர்ச்சியும் என்ற தலைப்பில் சற்று சிந்திப்போம்.

நன்றி: Yoga & Sex


## யோகாசன வகுப்பு

கனேடிய இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 3 வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறுதோறும் காலை 7:30 மணிக்கு Markham /Ellesmere இற்கு அருகாமையில் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப் பட்டு வருகின்றது.

மேலதிக தொடர்புகளிற்கு - சத்தி: **291-5853**

| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
|---|---|---|---|
| ல | யோ கா சோ தி ட ம் | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | 10 | 9 | பலன் பார்த்தல் |




## Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

# நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்




கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484

## ELECTRICAL REPAIRS



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் ரேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ **261-6883**

## தபால் வழி ஜோதிடக் கல்வி
## தபால் வழி ஜோதிடப் பலன்
## தபால் வழி திருமண சேவை


ஆயகலைகள் அறுபத்து நான்கினிலே அற்புதக்கலையாம் ஜோதிடத்தை அன்பினுமினிய தமிழில் பல நூற்றுக்கணக்கான உதாரண ஜாதகங்களுடன் தபால் வழி கற்பிக்க முன் வந்துள்ளோம். இத்தெய்வீகக் கலையை கற்பிக்கும் ஆற்றல் மிக்கோர் பலர் இருப்பினும் கற்பிக்கும் மனம் கொண்டோர் சிலரே அதில் ஒருவரே நாம். ஆகையினால் கற்றுக் கொள்ள விரும்புவோர் எமக்கு தபாலிடுக. நாம் பூரண விபரங்களை தபாலில் அனுப்பி வைக்கின்றோம்.

நாளைய வாழ்வறிந்தால் நலமுடன் வாழலாம். மலையேன துன்பம் வந்தால் மலைப்பின்றி விரட்டியடித்து வெற்றி காணலாம். ஆகையினால் நீங்கள் விரும்பும் மூன்று கேள்விகளுடன் உங்கள் பிறந்த வருடம் மாதம் நாள் நேரம் ஊர் ஆகியவற்றுடன் 50 டொலருக்கான காசோலையை தபாலில் எமக்கு அனுப்பி வைத்தால் நாம் உங்கள் கேள்விகளுக்கு ஜாதகத்துடன் பலன் எழுதி அனுப்பி வைக்கின்றோம்.

மணமகன் மணமகள் வேண்டுவோர் உங்களைப் பற்றிய விபரங்களுடன் உங்களது படத்துடனும் நீங்கள் எப்படியான மணமகன் அல்லது மணமகளை எதிர்பார்க்கின்றீர்கள் என்றும் 50டொலருக்கான காசோலையுடன் எமக்கு தபாலிட்டால் நாம் உங்கள் விருப்பம் போல் மணமகன் அல்லது மணமகள் அமையப்பெறின் அறியத்தருகின்றோம். மற்றும் நீங்கள் அனுப்பும் 50 டொலர் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஏனெனில் நாம் தொடர்ந்து வானொலியில் பத்திரிகைகளில் எமது சேவையை தெரியப்படுத்தல் வேண்டும். மற்றும் உங்கள் ஜாதகங்களுக்கு ஜாதகப் பொருத்தம் பார்க்க வேண்டும். பொருத்தமான ஜாதகங்கள் மட்டுமே உங்களுக்கு தரப்படும். எவ்வளவு காலம் எடுக்குமென்று எம்மால் கூறமுடியாது. சிந்தித்து தெளிவு பெற்ற பின்னர் 50 டொலருக்கான காசோலையை எமக்கு அனுப்பவும். கடவுள் கை கொடுப்பார் காலம் கருணை செய்யும் நம்பிக்கையை தளர விட்டுவிடாதீர்கள்.

**K. VARATHALINGAM**
**31 ST. DENNIS DRIVE #814**
**NORTH YORK M3C 1G7** (DONMILLS & EGLINTON)

# முத்துக்குறள் மூன்று



ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்

கடந்த விளம்பர இதழில் திருக்குறளை உலக வேதமாக்க அரும்பாடுபட்டு வரும் உலகத் தமிழ் அறக்கட்டளைத் தலைவர் திரு. அழகப்பன் இராமோகன் அவர்களின் திருக்குறள் சேவையைப் பற்றி எழுதியிருந்தேன். அவருடைய அரும்சேவையைப படித்த அன்பர்கள் அவருடன் தொடர்புகொள்வதற்கு என்னை அழைத்துக கேட்டார்கள். இதற்கமைய எல்லோருக்கும் உதவும் வகையில் அவருடன தொடர்புகொள்ள வேண்டிய விலாசம் **MR. AL. Ramohan,**
**Director,**
**International Tamil Language Foundation,**
**8417 Autumn Drive,**
**Woodridge, IL - 60517, USA.**
தொலைபேசி: 1-630-985-3141 தொலைநகல்: **1-630-985-3199**
**Internet Website: www. kural. org.**

திருக்குறள் உலக வேதமாக வேண்டும் என்றால் உலக மக்களிடையே பரப்பப்பட்டு, உலக மக்களால் ஒரு வாழ்க்கை நெறியாக, ஒரு வேதமாகப் பின்பற்றப படவேண்டும். உலகம் அனைத்திலும் உள்ள 10 கோடி மக்களும் தமிழை மதித்து, தமிழை உணர்ந்து, தமிழின் பண்பாட்டை வளர்த்து, நாம் வெறும் தமிழ் பேசும் மனிதனர்கள் அல்ல, ஒரு உயர்ந்த, முதல் மொழி பிறந்த மானிடத்தின் வழித்தோன்றல்கள். உலகின் மிகச் சிறந்த அறிவுப் பொக்கிஷங்கள் நிறைந்த மிக உயர்ந்த மொழி. அந்தத் தமிழ் மொழியைப் பேசும் தமிழர்கள் நாம் என்பதை உலகெல்லாம் பறைசாற்றும் வகையிலே வாழவேண்டியது நடவடிக்கை எடுக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனின் தலையாய கடமை. 21ம் நூற்றாண்டிலே தமிழ் மக்களின் தரம் உலக அரங்கிலே மிக உயர்ந்த நிலையை அடையப் போகிறது இது உறுதி. யூத இனத்துக்கு அடுத்த படியாக அலைந்து பட்ட இனமும் ஆக்கபூர்வ அறிவு மிக்க இனமும் மிகஉயர்ந்த பண்பாடும், கலாச்சாரமும் கொண்ட இனம் தமிழினம் என்பது உலகறியும். இன்று குடத்திற்குள் உள்ள விளக்காக இருக்கும் தமிழரின் நிலையை குன்றிலிட்ட விளக்காக பிரகாசிக்கச் செய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். காலத்தின் கட்டளையால் உலக அரங்கிலே தமிழினம் மிகஉயர்ந்த நிலையை அடைவது உறுதி. பாரதியார் கூற்றுப்படி

*"யாம் அறிந்த மொழிகளிலே*
*தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்*
*பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும்*
*இகழ்ச்சி யுற பான்மை கெட்டு*
*நாமமது கொண்டு தமிழெனக் கொண்டு*
*வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லிர்*
*தேமதுரைத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும்வகை செய்தல் வேண்டும்."*

தமிழர்கள் ஒரு மொழியினர். ஆனால் பல நாட்டினர் என்பது இன்றைய உண்மை. காலநெடுங்கணக்கில் 21ம் நூற்றாண்டை நோக்கி தமிழினம் சென்றுகொண்டிருக்கும் இந்த வேளையில் தமிழர்களுக்கு தங்களது சிந்தனைகளையும் கருத்துக்களையும் செய்திகளையும் படைப்புக்களையும் யாவரும் புரியும் வகையில் பரந்து பகிரும் முறையில் உதவக்கூடிய வண்ணம் ஒரு மத்திய தமிழ் ஆராய்ச்சி அமைப்பு இன்றைய கட்டத்தில் தேவை. ஆனால் அவை ஒவ்வொரு உலகத் தமிழரையும் பரவலான முறையில் சென்றடைய அமைக்கப்படாவிட்டால் தமிழ்ப் பண்பாடும் நாகரீகமும் கலாச்சார உணர்வும் அழிந்து போவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன.

மேற்கொண்டு திருக்குறள் பற்றி எழுதுமுன் திருக்குறள் உலக சாதனை ஒன்றை உங்களிற்கு தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன். தென்னிந்தியாவிலே தமிழ்நாட்டிலே திருவள்ளுவர் மாவட்ட துறையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமூலநாதன் என்னும் 4 வயது சிறுவன் 19, 02, 88ல் பிறந்தார். தந்தையார் பூவை பி. தயாளன். ஒரு தலைமை ஆசிரியர். தாய் பெயர் காந்திமதி. திருமூல நாதன் 2½ வயதாக இருக்கும் போது 95 வரிகளுடைய சிவபுராணத்தை மனப்பாடப் செய்து கொண்டார். சிறுவயதிலேயே பெற்றோருடன காலையிலிருந்து தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் யாவற்றையுதும் மனனம் செய்து வைத்துள்ளான்.

இச் சிறுவன் 3½ வயதாகிய போது திருக்குறளை படிக்க ஆரம்பித்தான். அப்படி ஒழுங்காக கற்றுக்கொண்டதன் பயனாக 11 மாதங்களில் 1330 குறளையும் எதுவித பிழையுமின்றி மனனம் செய்து ஒப்புவித்தார். இதனை மேடையிலே அரங்கேற்றும போது இவருக்கு 4வயது இரண்டு மாதம் 9நாட்கள் ஆகும். இப்படிக் குறளை மனனம் செய்தவர்கள் யாருமில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதனால் கின்னஸ் புத்தகத்தில் இவரது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள திருக்குறள் மையம் 14/ 4/ 93ல் "திருக்குறள் திருவளர் செல்வன்" என்ற விருதை வழங்கி கௌரவித்தது. அமெரிக்கா கலிபோர்ணியா மாநில கலைபண்பாட்டுக் கழகம் 16/ 8/ 95ல் 6½ வயதனான திருமூலநாதனுக்கு கௌரவ "கலாநிதி" பட்டம் வழங்கி கௌரவித்தது. 1330 குறளையும் இடைவேளையின்றி தொடர்ச்சியாக 66 மணித் துளிகளில் தெளிவாக ஓதி இன்னொரு உலக சாதனையை நிகழ்ந்தியுள்ளார். 6 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் திருமூலநாதனைக் கௌரவித்து பட்டங்கள் வழங்கியுள்ளார்கள். 7 வயது நிறைவதற்கு முன்னர் திருமூலநாதன் ஏறிய மேடைகள் 295 ஆகும். பெற்ற விருதுகள் 45. தமிழில் 32 இலக்கியங்களில் இருந்து 700க்கும் மேற்பட்ட பாடல்களை மனனம் செய்தும் அவற்றை இலகுவாக பாடும் திறனும் பெற்றுள்ளார். இச்சிறுவன் தமிழ், சமஸ்கிருதம், இந்து, மலையாளம், தெலுங்கு, படுகு, மொழிகளிலும் பாடும் திறனையும பெற்றுள்ளார். இக்கட்டத்தில் ஒரு குறளைக் கூற விரும்புகிறேன். (61) **"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட் பே றல்ல பிற"**
நாம் பெறும் செல்வங்களுள் நல்லறி ஞானமுள்ள பிள்ளைகளை பெறுவதைப் போல் வேறொன்றுமில்லை என்று குறிப்பிடுகிறார். (70) **மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்லெனும் சொல்"** ஒரு பிள்ளை பெற்றோர்க்கு ஆற்றும மிகப்பெரிய கடமை இவனைப் பிள்ளையாகப் பெறுவதற்கு பெற்றோர் என்ன தவம் செய்தார்கள் என்று புகழப்படுவதாக அமைய வேண்டும். அதே நேரத்தில் இன்னும் ஒன்றைக் கவனிக்க வேண்டும் உலகத்தவர் நம்மையும் நம்பிள்ளைகளையும் பார்த்துப் போற்றவேண்டுமே தவிர தூற்றக் கூடாது. அதை திருக்குறளில்
**"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பேறின்"** அதாவது ஏழுபிறவிக்கும் நம்மை தீமையும், பழியும் வந்து சூழாத அளவுக்கு நன்மைகளையே செய்து வீட்டிற்கும், நாட்டிற்கும் பிள்ளைகளை நாம் பெறவேண்டும். இன்றைய காலகட்டத்திலே விஞ்ஞானிகளே ஏற்றுக் கொள்கின்றனர் புரியாமல் தவிக்கின்றனர்; ஏன் இன்றைய பிள்ளைகளில் சிலர் அதாவது வருங்கால உலகத்தின் சிற்பிகள், வழிகாட்டிகள் பெற்றோரை மதிக்காது சிறிதும் பண்பு இல்லாது, கல்வியைக் கற்காது ஒழுக்கமில்லாது இளம் வயதிலேயே குற்றங்களைப் புரிந்து சமுதாய அமைதியைக் கெடுத்து வாழ்வது மிகவும் வேதனைக குரியது. சில பெற்றோர் பிள்ளைகளால் படும் துன்பத்தைக் கண்டு மிகவும் வேதனையுற்றுள்ளேன். அப்போ அவர்களுக்கும் கூறும் அறிவுரை என்னவென்றால் நல்ல கப்பல் கடலில் பயணம் செய்யும் போது கல்லிலே மோதுண்டு மூழ்கிப் போனால் கப்பலின் குற்றமா? கல்லின் குற்றமா? மாலுமியின் குற்றமா? என்னைப் பொறுத்தவரையில் கப்பல் பிள்ளையென்றால் மாலுமிதான் பெற்றோர். அந்தக் கல்லுத்தான் பிள்ளை செய்த தவறு. **"ஐந்தில் வளையாதது; ஐம்பதில் வளையாது"** என்று சொல்வார்கள் **"தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்"** இதிலிருந்து நாம் என்னத்தைக் கற்றுக் கொள்கிறோம் சிறுவயதிலேயே பிள்ளைகளை நாங்கள் மிகமிகக் கவனமாக வளர்க்க வேண்டும். பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வது என்பது சிறுவிடயம். இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. இது உலக இயற்கை. காலத்தின் அசைவிலும் இசைவிலும் ஏற்படும் பிரபஞ்சத்தின் ஒரு வாழ்க்கை முறை. பிள்ளைகளை பெற்று விட்டால் மட்டும் போதாது. அவர்களை வளர்த்து விடுவதுதான் மிகமிகக் கடினம். சுரங்கத்திலே கண்டெடுக்கும் தங்கமும் வைரமும எடுக்கப்படும் பொழுது உங்கள் கழுத்திலே இருக்கும் அழகான தங்கம், வைரம் போலில்லை. அவற்றை எடுத்து தங்கத்தை புடம் போட்டும், வைரத்தை பட்டம் வெட்டியும் எவ்வளவோ செம்மைப்படுத்திய பின்புதான் அந்த உயர் நிலைக்கு மாறி புன்னகையுடன் சேர்ந்து பொன்னகையாக மாறுகிறது. அரச கிரீடத்திலும் திகழ்கிறது. ஆகவே ஒரு பிள்ளையை சிறு வயதிலிருந்தே மிகக் கவனமாகவும் கண்ணும் கருத்துமாக வளர்த்து எடுத்தால் அந்தப் பிள்ளை பண்புள்ள, அறிவுள்ள ஒழுக்கமுள்ள பிள்ளை நல்ல தலைவனாக, விஞ்ஞானியாக .... மாறும் என்பதில் ஐயமுண்டா. (தொடரும்)



6 வருடமாக இயங்கிவரும் ஸ்தாபனம்
அப்சராஸ்
RESTAURANT & CATERING

* கொத்துரொட்டி எல்லா வகைகளும் $3.50 (TAKE-OUT ONLY)
* வாழை இலைச் சாப்பாடு $6.00 ( " )
* "மண்வாசனை" வாழை இலைச் சாப்பாடு
* எல்லாவகையான வைபவங்களிற்கும்
அழையுங்கள் (416) 412-6164
2778 Kennedy Road, Scarborough, Ont. (Kennedy / Finch)


AIRPORT SERVICE & MOVING VAN
ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு
☎: (416) 759-0557



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை
குடிவரவுச் சட்டம்
Immigration Law
குற்றவியல் சட்டம்
Criminal Law
குற்றவியல் தண்டனை பெறுவதனால்....

உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship
பாதிக்கப்படலாம்.

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
அடுத்து செய்யவேண்டியது என்ன?

முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...
பின் இவரை அழையுங்கள்...
எஸ்.கே. தீசன்
(416) 631-6322

# விளையாட்டுத் தகவல்கள் (31)

*எஸ். கணேஷ்*



## மதுரைக்கு வந்த சோதனை!!!

## WORLD CUP - 1999 CRICKET

"போடு மச்சான் பொல்லு பறக்க!", "அடிடா மச்சான் பவுண்றி சிக்ஸர்!" எமது பள்ளிப்பருவத்தில் கிரிகெட் ஆட்டங்களை கண்டு களிக்கும் போது நாம் பாடும் வரிகள் இவை. இலங்கை கிரிக்கெட் அணியும் கடந்த பல வருடங்களாக இப் பாட்டு வரிகளை உலகம் எங்கும் நிரூபித்து வந்தது. ஆனால் திடீரென இலங்கை அணிக்கு என்ன நடந்தது என்பது பலரின் கவலை. 1996ம் ஆண்டு World Champion ஆன இலங்கை அணி அடுத்து வந்த பல போட்டிகளில் தாங்களே உலகத்தில் சிறந்த துடுப்பாட்ட அணி என்பதை நிரூபித்து வந்தது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக இலங்கை அணி பல தோல்விகைள சந்தித்து வந்தது. இவ் World Cup-99 இலங்கை அணிக்கு ஒரு சோதனைக் களம் என முன்பே விளம்பரம் இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு உலகத்திலேயே வானளாவிய கோபுரங்களை கொண்ட மதுரை நகரை வெள்ளம் வந்து அளித்தது. அப்போது சொன்னார்கள் இவ்வளவு உயர்ந்த மதுரையே அளிந்தபோது "இது மதுரைக்கு வந்த சோதனை" என்று. அதுபோல் உலகிலேயே கிரிக்கெட் ஆட்டத்தில் ஜெயசூரியா, அரவிந்த என்பவர்களை கண்டால் மற்றைய அணிகள் நடுங்கும் அளவிற்கு இவர்கள் ரண்களை குவித்தார்கள். இலங்கை அணியை Runs Machine என்று சொல்லும் அளவிற்கு சகல நாடுகளிலும் இருந்து ரசிகர்களை சம்பாதித்துக் கொண்டனர். தற்போது சகல ரசிகர்களின் வாயிலும மண்ணை போடும் அளவிற்கு என்ன நடந்தது இலங்கை அணிக்கு? ? ?

"பணம் பாதாளம் வரை பாயும்" என்பது முதுமொழி. இலங்கை அணியிலும் அப்படி நடந்து விட்டதா என எண்ணத் தோன்றுகின்றது. உலகிலேயே சிறந்த வீரர்கள் ஆன அவுஸ்திரேலியா வீரர்கள் S. Waugh, S. Warne என்பவர்கள் பணத்திற்காக தங்கள் நாட்டை தோல்வியுறச் செய்தார்கள் என்ற முறைப்பாட்டை வைத்து தற்போது வழக்கு நடைபெற்று கொண்டிருக்கிறது. இவர்கள் இருவரும் தாங்கள் தங்கி இருந்த Hotel இலில் தங்களுக்கு பணம் தர சில வியாபார முகவர்கள் முற்பட்டனர் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். பாகிஸ்தான் வீரர் ஆன Salim Malir பணம் வாங்கிய குற்றச்சாட்டுக்காக ஆறு மாதங்கள் அணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். இப்படி பல வீரர்கள் மேல் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி உலகத்திலேயே மிகப் பெரிய கிரிகெட் வீரர்களே பணத்திற்கு அடிபணிந்து விட்டனர் என்றால் இலங்கை வீரர்கள் எம்மாத்திரம் என்று சிந்திக்க வைக்கின்றது? ஜெயசூரியா, அரவிந்த, அர்சுனா ஆகிய இம்மூன்று வீரர்களின் பெறுபேறுகளை நோக்கும்போது இப்படி சந்தேகிக்கத்தான் தோன்றுகின்றது. சந்தேகம் மனித இயல்பு. ஏனெனில இம்மூன்று வீரர்களும் முன்பு துடுப்பாடும் போது எவற்றை பற்றியும கவலைப்படுவதில்லை. அனாசியாமாக பந்துகளை விளாசி தள்ளுவார்கள். ஆனால கடந்த மூன்று ஆட்டங்களிலும் Pitch இல் இம்மூவரும் ஏனோதானோ என்று நடந்து கொள்கிறார்கள் என்று சந்தேகப்படத் தோன்றுகின்றது.

England உடன் ஆடும் போதும், South Africa உடன் ஆடும் போதும் இலங்கையின் இலக்கு மிக குறைவாகவே காணப்பட்டது மிகவும் இலேசாக வெல்லக்கூடிய இவ்விரு ஆட்டங்களிலும் தோல்வியே கண்டனர். இதில் குறிப்பாக இலங்கை அணியின் Fielding லும் Bowlingலும் சிறப்பாக நடைமுறைப்படுத்தினார்கள். ஆனால் Batting இல் இலங்கை அணி தவிடு பொடியாகியது. இதில் குறிப்பாக முரளிதரன் முதல் இரண்டு ஆட்டங்களிலும் சிறப்பாக பந்து வீசினார். மற்றைய அணி வீரர்களே நடுங்கும் அளவிற்கு பந்துகளை திறமையாக வீசினார். ஆனால் இந்தியாவுடன் நடந்த போட்டியில் பந்து வீச்சு அம்போ என்றாகி விட்டது. இலங்கை அணி (Super Six) அடுத்த Round இல் போட்டியிடும் என்ற நம்பிக்கை தளர்ந்து விட்டது. 96 World Champions இலங்கை அணி முதல் Round இலேயே தோற்று விடுவார்கள் என்பதை பார்க்கும் போது சகல ரசிகர்களையும் இலங்கை அணி ஏமாற்றி விட்டது என்பதையே எண்ணத் தோன்றுகின்றது.

இதுவரை இலங்கை அணி கலந்து கொண்ட ஆட்டங்களை இங்கு பார்ப்போம்.

### 1. இலங்கை Vs இங்கிலாந்து MAY 14, 1999 இங்கிலாந்து 8 விக்கெட்டுகளால் வெற்றி

| Sri Lanka innings (50 overs maximum) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| ST Jayasuriya | c Hick | b Mullally | 29 | 52 | 4 | 0 |
| RS Mahanama | c Hick | b Mullally | 16 | 30 | 2 | 0 |
| MS Atapattu | c Thorpe | b Austin | 3 | 9 | 0 | 0 |
| HP Tillakaratne | c Stewart | b Ealham | 0 | 12 | 0 | 0 |
| PA de Silva | c Thorpe | b Mullally | 0 | 6 | 0 | 0 |
| *A Ranatunga | c Hussain | b Ealham | 32 | 42 | 1 | 1 |
| +RS Kaluwitharana | c Stewart | b Mullally | 57 | 66 | 7 | 0 |
| WPUJC Vaas | not out | | 12 | 27 | 0 | 0 |
| KEA Upashantha | c Thorpe | b Hollioake | 11 | 25 | 1 | 0 |
| GP Wickramasinghe | c Stewart | b Austin | 11 | 18 | 1 | 0 |
| M Muralitharan | | b Gough | 12 | 8 | 2 | 0 |
| Extras | (lb 9, w 9, nb 3) | | 21 | | | |
| Total | (all out, 48.4 overs) | | 204 | | | |

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Gough | 8.4 | 0 | 50 | 1 (2nb, 1w) |
| Austin | 9 | 1 | 25 | 2 (5w) |
| Mullally | 10 | 1 | 37 | 4 (1nb, 1w) |
| Ealham | 10 | 0 | 31 | 2 |
| Flintoff | 2 | 0 | 12 | 0 |
| Hick | 3 | 0 | 19 | 0 (1w) |
| Hollioake | 6 | 0 | 21 | 1 |

| England innings (target: 205 runs from 50 overs) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| N Hussain | st Kaluwitharana | b Muralitharan | 14 | 33 | 1 | 0 |
| *+AJ Stewart | c Kaluwitharana | b Vaas | 88 | 146 | 6 | 0 |
| GA Hick | not out | | 73 | 88 | 2 | 2 |
| GP Thorpe | not out | | 13 | 15 | 1 | 0 |
| Extras | (lb 6, w 12, nb 1) | | 19 | | | |
| Total | (2 wickets, 46.5 overs) | | 207 | | | |

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Vaas | 10 | 2 | 27 | 1 |
| Wickramasinghe | 10 | 0 | 41 | 0 |
| Upashantha | 8 | 0 | 38 | 0 (1nb, 8w) |
| Muralitharan | 10 | 0 | 33 | 1 (2w) |
| Jayasuriya | 7.5 | 0 | 55 | 0 (2w) |
| de Silva | 1 | 0 | 7 | 0 |


TAMIL INSURANCE CLAIMS CONSULTANT தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு

*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு

*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

ரவி நடராஜா

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766

2095 Weston Rd. #201 (South of HWY 401) =Toronto Ont. M9N 1X7


### 2. இலங்கை Vs தெற்கு ஆபிரிக்கா May 19, 1999 ஆபிரிக்கா 89 ஓட்டங்களால் வெற்றி

| South Africa innings (50 overs maximum) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| G Kirsten | | b Vaas | 14 | 14 | 3 | 0 |
| HH Gibbs | c Kaluwitharana | b Vaas | 5 | 15 | 1 | 0 |
| +MV Boucher | | b Wickramasinghe | 1 | 10 | 0 | 0 |
| JH Kallis | c Mahanama | b Wickramasinghe | 12 | 26 | 0 | 0 |
| DJ Cullinan | c Vaas | b Muralitharan | 49 | 82 | 4 | 0 |
| *WJ Cronje | run out (Jayawardene/Kaluwitharana) | | 8 | 21 | 0 | 0 |
| JN Rhodes | c Jayasuriya | b Muralitharan | 17 | 25 | 2 | 0 |
| SM Pollock | | c & b Muralitharan | 2 | 9 | 0 | 0 |
| L Klusener | not out | | 52 | 45 | 5 | 2 |
| S Elworthy | c Kaluwitharana | b Vaas | 23 | 40 | 3 | 0 |
| AA Donald | not out | | 3 | 16 | 0 | 0 |
| Extras | (lb 2, w 7, nb 4) | | 13 | | | |
| Total | (9 wickets, 50 overs) | | 199 | | | |

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Wickramasinghe | 10 | 1 | 45 | 2 (1nb, 4w) |
| Vaas | 10 | 0 | 46 | 3 (3nb) |
| Jayawardene | 10 | 0 | 46 | 0 (1w) |
| Muralitharan | 10 | 1 | 25 | 3 (1w) |
| Chandana | 7 | 0 | 26 | 0 (1w) |
| Jayasuriya | 3 | 1 | 9 | 0 |

| Sri Lanka innings (target: 200 runs from 50 overs) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| ST Jayasuriya | | b Kallis | 5 | 14 | 0 | 0 |
| +RS Kaluwitharana | c Cullinan | b Kallis | 5 | 10 | 1 | 0 |
| MS Atapattu | c Boucher | b Kallis | 1 | 10 | 0 | 0 |
| PA de Silva | lbw | b Pollock | 1 | 8 | 0 | 0 |
| RS Mahanama | lbw | b Pollock | 36 | 71 | 3 | 0 |
| *A Ranatunga | c Boucher | b Donald | 7 | 19 | 1 | 0 |
| DPMdeS Jayawardene | c Kallis | b Elworthy | 22 | 32 | 4 | 0 |
| UDU Chandana | c Cullinan | b Klusener | 9 | 22 | 1 | 0 |
| WPUJC Vaas | c Pollock | b Klusener | 1 | 10 | 0 | 0 |
| GP Wickramasinghe | | b Klusener | 6 | 17 | 0 | 0 |
| M Muralitharan | not out | | 0 | 0 | 0 | 0 |
| Extras | (lb 5, w 10, nb 2) | | 17 | | | |
| Total | (all out, 35.2 overs) | | 110 | | | |

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Pollock | 8 | 3 | 10 | 2 (2nb) |
| Kallis | 8 | 0 | 26 | 3 (6w) |
| Elworthy | 8 | 1 | 23 | 1 |
| Donald | 6 | 1 | 25 | 1 (3w) |
| Klusener | 5.2 | 1 | 21 | 3 |

### 3. இலங்கை Vs சிம்பாவே May 22, 1999 இலங்கை நான்கு விக்கெட்டுகளால் வெற்றி

| Zimbabwe innings (50 overs maximum) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| NC Johnson | c Wickramasinghe | b Upashantha | 8 | 17 | 1 | 0 |
| GW Flower | c Kaluwitharana | b Wickramasinghe | 42 | 69 | 6 | 0 |
| PA Strang | | b Wickramasinghe | 5 | 8 | 1 | 0 |
| MW Goodwin | run out (Jayasuriya/Muralitharan) | | 21 | 29 | 2 | 0 |
| +A Flower | c Kaluwitharana | b Jayasuriya | 41 | 60 | 3 | 0 |
| *ADR Campbell | c Kaluwitharana | b Wickramasinghe | 6 | 8 | 1 | 0 |
| GJ Whittall | c Ranatunga | b Muralitharan | 4 | 11 | 1 | 0 |
| SV Carlisle | run out (Vaas/Jayasuriya) | | 27 | 36 | 1 | 1 |
| HH Streak | c Atapattu | b Muralitharan | 10 | 23 | 0 | 0 |
| EA Brandes | not out | | 19 | 29 | 1 | 1 |
| HK Olonga | not out | | 5 | 10 | 1 | 0 |
| Extras | (lb 3, w 6) | | 9 | | | |
| Total | (9 wickets, 50 overs) | | 197 | | | |

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Vaas | 10 | 1 | 47 | 0 (1w) |
| Upashantha | 10 | 1 | 43 | 1 (4w) |
| Wickramasinghe | 10 | 1 | 30 | 3 |
| Jayawardene | 1 | 0 | 8 | 0 |
| Muralitharan | 10 | 2 | 29 | 2 (1w) |
| Jayasuriya | 7 | 0 | 28 | 1 |
| de Silva | 2 | 0 | 9 | 0 |

| Sri Lanka innings (target: 198 runs from 50 overs) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| ST Jayasuriya | c Goodwin | b Johnson | 6 | 17 | 0 | 0 |
| RS Mahanama | | b GJ Whittall | 31 | 64 | 3 | 0 |
| MS Atapattu | c Campbell | b Streak | 54 | 90 | 4 | 0 |
| PA de Silva | c sub (AR Whittall) | b GJ Whittall | 6 | 15 | 0 | 0 |
| *A Ranatunga | | c & b GJ Whittall | 3 | 12 | 0 | 0 |
| DPMdeS Jayawardene | lbw | b Streak | 31 | 36 | 4 | 0 |
| +RS Kaluwitharana | not out | | 18 | 30 | 2 | 0 |
| WPUJC Vaas | not out | | 17 | 17 | 2 | 0 |
| Extras | (lb 6, w 21, nb 5) | | 32 | | | |
| Total | (6 wickets, 46 overs) | | 198 | | | |

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Brandes | 8 | 0 | 28 | 0 (2w) |
| Johnson | 7 | 1 | 29 | 1 (5w) |
| Streak | 8 | 1 | 30 | 2 (6w) |
| GJ Whittall | 10 | 1 | 35 | 3 (1nb, 2w) |
| Olonga | 9 | 0 | 50 | 0 (4nb, 3w) |
| GW Flower | 2 | 0 | 10 | 0 |
| Strang | 2 | 0 | 10 | 0 |

தொடர்ச்சி 12ம் பக்கம்

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுத்துத் தருபவர் - பரம்

**1961**

| | |
|---|---|
| 1. அக்பர் | 2. அன்பு மகன் |
| 3. அரசிளங்குமரி | 4. என்னைப் பார் |
| 5. எல்லாம் உனக்காக | 6. கப்பலோட்டிய தமிழன் |
| 7. கானல் நீர் | 8. குமுதம் |
| 9. குமார ராஜா | 10. கொங்கு நாட்டு தங்கம் |
| 11. சபாஷ் மாப்பிளே | 12. நல்லவன் வாழ்வான் |
| நாகநந்தினி | |
| தாய் சொல்லைத் தட்டாதே | |
| 15. தாயில்லாப் பிள்ளை | 16. திருடாதே |
| 17. தூய உள்ளம் | 18. தேன் நிலவு |
| 19. பணம் பந்தியிலே | 20. பங்காளிகள் |
| 21. பனித்திரை | 22. பாலும் பழமும் |
| 23. பாக்கிய லட்சுமி | 24. பாசமலர் |
| 25. பாவமன்னிப்பு | 26. புனர்ஜென்மம் |
| 27. மல்லியம் மங்களம் | 28. மணப்பந்தல் |
| 29. மருதநாட்டு வீரன் | |
| 30. மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே | |
| 31. யார் மணமகன் | 32. ஸ்ரீவள்ளி |



'தாய் சொல்லைத் தட்டாதே' பி. கண்ணாம்பா, சரோஜாதேவியுடன்



'சபாஷ் மாப்பிளே'- மாலினியுடன்

61ம் ஆண்டிற்குரிய சிறந்த படம்:பாசமலர்
சிறந்த டைரக்சன்: பீம்சிங்
சிறந்த நடிகன்: சிவாஜி கணேசன்
சிறந்த நடிகை: சாவித்திரி
சிறந்த நகைச்சுவை நடிகர்: K.A. தங்கவேலு
சிறந்த கதை உள்ள படம்: பாவமன்னிப்பு
சிறந்த ஒளிப்பதிவு: A. வின்சன்ட்

1961ம் ஆண்டு 32 தமிழ் படங்கள தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்தன. 32 படங்களில் எம்.ஜி.ஆரின படம் 5 ஆகும். முறையே **அரசிளங்குமரி, திருடாதே, சபாஷ்மாப்பிள்ளே, நல்லவன வாழ்வான், தாய் சொல்லைத் தட்டாதே** என்பனவாகும்.

இந்த ஆண்டு வெளிவந்த சிவாஜியின் படங்கள் எட்டு ஆகும். அவை **பாவமன்னிப்பு, புனர்ஜென்மம், பாசமலர், எல்லாம் உனக்காக, ஸ்ரீவள்ளி, மருத நாட்டு வீரன், பாலும் பழமும், கப்பலோட்டிய தமிழன்.**

இந்த ஆண்டு நடிகர் திலகம் சிவாஜி கணேசனிற்கு அதிஷ்டமான ஆண்டாகும். இந்த ஆண்டு சிவாஜி நடித்து வெளியான 'ப' வரிசைப படங்கள் மாபெரும் பாராட்டைப் பெற்றறன. இந்த ஆண்டு வந்து எல்லோராலும் பெரிதாகப் பேசப்பட்டதுடன இந்திய அரசால் வழங்கப்பட்ட வெள்ளிப் பதக்கமும் பெற்ற படம் 'கப்பலோட்டிய தமிழன்'. இதில் சிவாஜி அவர்கள் வ.உ. சிதம்பரனார் ஆக நடித்துள்ளார். தேசிய உணர்வை ஊட்டக்கூடிய பாத்திரத்தில் சிவாஜி கணேசனின் நடிப்பு மிகச் சிறந்தது. 52ம் ஆண்டு தொடங்கிய தென்னிந்திய நடிகர் சங்கத்தில் தலைவராக எம்.ஜி.ஆர். கடமை ஆற்றினர்.



'நல்லவன் வாழ்வான்'- ராஜசுலோசனாவுடன்

## நான் வாழப் போகிறேன்

### சுவடு 31

-வீணை மைந்தன்



கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக என்னால் எழுதப்பட்டு வரும் இத்தொடரை நிறைவு செய்யும் நாள் நெருங்கி வருகிறது. இனிவரும் இதழிகளில் நடிகர் திலகம் அவர்களைப் பற்றி அவருடன் மிகநெருக்கமாகப் பணிபுரிந்தும் - நட்புரிமை பாராட்டியும் வருகின்ற கலைஞர்கள் பெரியோர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் கூறியவற்றைக் குறிப்பிட்டு எழுத உள்ளேன்.

அந்த வரிசையில் நடிகர் திலகம் அவர்களுடன் மிக நெருக்கமானவர் 'பராசக்தி' காலத்திலிருந்தே அவருடன் இணைந்து பலபடங்களில் குணச்சித்திர பாத்திர மேற்று நடித்தவரும் சிவாஜி அவர்களை வைத்து "வடிவுக்குவளைகாப்பு" போன்ற சில திரைப்படங்களைத் தயாரித்தவருமான 'கலைமாமணி' வி.கே. இராமசாமி அவர்கள் கூறுவதை இங்கு தருகிறேன்.

நாட்டுக்கு ஒரு நல்ல தலைவன் கிடைப்பது போல சினிமா உலகத்திற்கு ஒரு நல்ல கலைஞன் கிடைத்தார். 1952ம் வருடம் அந்த ஆண்டு கலைக்கு ஒரு பொன்னான ஆண்டு. அவர் நடித்த முதல் படம் பராசக்தி. அந்த பராசக்தியின் அருள் முதற் படத்திலேயே கிடைத்தது. 47 ஆண்டுகளாக இன்று வரை நிலைத்து நின்ற பெருமை நடிகர் திலகத்திற்குத்தான் கிடைத்தது. 1999வரை நீடிக்கிறதென்றால் அவர் நடிப்புத் திறமையும், பொறுமையும், எதையும் ஒளிவு மறைவின்றிப் பேசும் குணமும் அவர் செய்கின்ற தர்மமும் அவரைப் பெற்ற பெற்றோர்கள் செய்த புண்ணியமும் நடிகர் திலகத்தின் பூர்வ ஜென்மப் புண்ணியமும் அவரை இந்த நிலைக்கு உயர்த்தியது என்றால் மிகையாகாது.

நடிப்பு அவருடைய உயிர் மூச்சு. நடிப்பதற்காகப் படப்பிடிப்புத் தளத்திற்கு வந்து விட்டால் அந்த இடத்தைத் தெய்வம் இருக்கும் கலைக்கோவிலாகவே மதித்தார். படப்பிடிப்புக்கு ஒப்பனையோடு படம் எடுக்கும் புளோருக்குள் நுழைந்து படப்பிடிப்பை நிறுத்திய பிற்பாடுதான் வெளியில் வருவார்...எக்காரணத்தைக் கொண்டும் முடியும்வரை வெளியில் வரமாட்டார். இதுபோன்ற முறைகள் வேறு எந்த நடிகரிடத்தும் காணக்கிடைக்காத தொழில் பக்தியாகும்.

தான்நடிக்கும் காட்சி முடிந்து அடுத்தவர்கள் காட்சி நடிக்கும் போதும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருப்பார். அதில் ஏதாவது குற்றம் குறையிருந்தால் உடன் எழுந்து வந்து குறைகளை எடுத்துச் சொல்லி நிவர்த்தி பண்ணும் ஆற்றலும் திறமையும் அவருக்கு நிறைய இருந்தது. எந்தக் காட்சியை எடுத்தாலும் அதில் ஒன்றி விடுவார். இவர் நடிக்கும் போது உடன் நடிப்பவர்கள், படத்தை இயக்குகின்ற இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள் அத்தனைபேரும் இவர் நடிப்பை வசனம் பேசும் முறையைப் பார்த்துப் பிரமிப்பார்கள்.

புளோரே பின்றொப் (Pin Drop) சைலன்சாக இருக்கும் இப்படி அவர் நடிக்கும் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக அமையும். இவர் நடிக்க வந்த காலம் தான் சினிமாவுக்கு ஒரு பொற்காலம். தினமும் ஸ்ருடியோக்கள் திருவிழாக் கோலம் கொண்டிருந்தது. இவர் நடித்த படங்கள் அத்தனையும் பேரும், புகழும், செல்வமும் கொட்டிக் கொடுத்து கலையுலகமே செல்வச் செழிப்போடு கொடி கட்டிப் பறந்தது. இவர் நடித்த படங்களை பாமரனிலிருந்து படித்தவன் வரை பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போன காலம். அந்தப் படங்களை விஞ்ஞானத்தின் உதவியால் இன்றும் டிவியில் போட்டுப் போட்டுப் பார்த்துப் பரவசம் கொள்கிறார்கள்.

இளைஞர்களிடம் இப்போது ஒரு மாற்றம் தெரிகிறது. இவர் நடித்த "வீரபாண்டிய கட்டபொம்மனைப் பார்த்து விட்டு இப்படியும் ஒரு நடிப்பு வசனம். அடடா... இதைப்போல இனி எவராலும் நடிக்கவும் முடியாது, பேசவும் முடியாது, என்று என்னிடம் நேரிலும் தொலைபேசியிலும் பல இளைஞர்கள் சொல்லக்கேட்டு.. என் மனம் நடிகர் திலகத்தின் நடிப்பு எந்தத் தலைமுறையையும் ஈர்க்கும் சக்தி வாய்ந்தது என்று எண்ணி, எண்ணி ஆனந்தக் கண்ணீரால் பூரித்துப் போகிறேன். *(தொடரும்)*


**கொக்குவில் இந்துக்கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் - கனடா**
**முக்கிய அறிவித்தல்**

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா கிளை வருடா வருடம் அங்கத்தவர்களுக்காக மட்டும் நடாத்தும் பண்ணிசை, பேச்சு, கட்டுரை, வாசிப்பு, எழுத்துப் போட்டிகள் இந்த வருடம் எதிர்வரும் **யூலை 3ந் திகதி சனிக்கிழமை காலை 8:30 மணிக்கு 1310 Neilson Road** இல் நடைபெறும். இப்போட்டிகளின் **வயதெல்லை 6 ,9, 12, 15, 20 வயதுக்குட்பட்டோர்** என்று ஐந்து பிரிவுகளாகக் பிரிக்கப்பட்டு ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் நடாத்தப்படும். வெற்றிபெற்றோருக்கான பரிசுகள் **எதிர்வரும் 31 ஜுலை** 1999 நடைபெற இருக்கும் வெளிக்கள விருந்தின் போது வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி - 26 ஜுன் 1999
ஒரு போட்டிக்கான கட்டணம் 5 டொலர்கள்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களுக்குக் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
(416) 264-7453, (416) **283-5265**,
(416) **267-0408**, (905) **792-0225**



NISSAN

**SCARBOROUGH NISSAN**

*SALES - SERVICE - PARTS - BODY SHOP*

புதிய அல்லது தரமான பாவித்த NISSAN, HONDA, TOYOTA மற்றும் இதர வாகனங்கள்




- *Low & Easy Financing* (மலிவானதும் இலகுவானதுமான கடன் வசதி )
- *Low Insurance Arrangements* (மிகக்குறைந்த காப்புறுதி பெற்றுத்தரப்படலாம்)
- *Best Trade In Values* (உங்களுடைய கார்களுக்கு சிறந்த பெறுமதி தரப்படும்)
- *Best Discount In Town* (நகரிலே சிறப்பான மலிவு விலை)
- *Best Leasing Programs*


FINANCING AVAILABLE FROM 4.5%

உங்கள் அனைத்து வாகன தேவைகளையும், வாகனம் வாங்குவதற்கான அறிவுரைகளுடனும் நம்பிக்கை நாணயம் உத்தரவாதத்துடனும் பெற்றுகொள்ள நாடுங்கள்

For your best deal
Call or Visit

1941 Eglinton Ave. E. (AT WARDEN)



**Sugu Velupillai**
Sales & Leasing Consultant

(416) 751-3511 / 24 Hrs Pager: 632-5950 / Cell: 716-6014

கனடாவில் முதன்முதல் தலைவாழையிலை விருந்து படைத்தவர்கள்.

# கிராமத்து விருந்து

ஜூன் 1ம் திகதி முதல் ஜூன் 31ம் திகதி வரை

திங்கள் - வெள்ளி வரை
(முதல் 100 க்கு மட்டும்)
100 இடியப்பம் சொதி சம்பல் $6.99

கொத்துரொட்டி
ஆடு, மாடு, கோழி, மரக்கறி
Take Out Only $3.99

மசால தோசை
சட்னி, சாம்பார்
Take Out Only $2.99

வியாழன், வெள்ளி மட்டும்
இட்லி செற்
சட்னி, சாம்பார்
Take Out Only $2.99

வெள்ளி மட்டும்
குண்டு தோசை செற்
$3.99

திங்கள், புதன், வியாழன், வெள்ளி
சிக்கன் சிங்கப்பூர் நூடில்ஸ்
Take Out Only $4.99

வெள்ளி மட்டும்
மரக்கறி விருந்து
Take Out Only $4.99

மெட்ராஸ் தாளி
வெள்ளித் தட்டில்
$5.99

603 Kennedy Road,
Scarborough, Ont.
(416) 266-4240
(416) 424-2164

1437 Gerrard Street
Toronto, Ont
(416) 405-9800
1457 Gerred வீதியில் உள்ள கிளை தவிர வேறு கிளை கிடையாது

## EASY WEIGHT LOST PROGAMME


தமிழர் மத்தியில் முதன் முதல் அறிமுகம்
நீங்கள் மெலிந்த அழகுள்ள பெண்ணாக, ஆணாக திகழ வேண்டுமா?
கவலையை விடுங்கள்
உங்கள் பருமனை குறைக்க மிக இலகுவான வழி

- NO FOOD DIETING
- NO DRUGS
- NO EXCERCISE
- NO MONTHLY FEE

1 மாதத்துக்குள் 15 இறாத்தலில் இருந்து 20 இறாத்தல் வரை நிச்சயமாக குறைக்கலாம் பலன் இல்லையெனில் பணம் திருப்பி தரப்படும்.

தொடர்புகளுக்கு
Latha: 416-405-9800
416-424-2164
Luxmy: 416-269-4702

மேற்கில் பசுபிக் சமுத்திரம், கிழக்கில் அத்திலாந்திக் சமுத்திரம், வடக்கில் ஆர்ட்டிக் சமுத்திரமும் காணப்படுகிறது.




* கனடாவின் உத்தியோக பூர்வ (தேசிய) பிராணி பீவர் (Beaver) ஆகும்.

* கனடாவின் இன்றைய பிரதம மந்திரி, ஜோன் கிறிச்சியான் 1993ம் ஆண்டிலிருந்து பதவியிலிருக்கிறார். இவரே கனடாவின் 20 வது பிரதம மந்திரி ஆவார்.

* யூலை 1ந் திகதி கனடா நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

* கனடாவின் மொத்தபரப்பளவு அண்ணளவாக 10 மில்லியன் சதுர கிலோமீற்றர் ஆகும்.

தொகுப்பு: சிவ பஞ்சலிங்கம்

C.T.B.C
மென்மையான நட்பு

# அந்திப்பூக்கள்

June 05, 1999 - 4.55pm
Alan A. Lamport Stadium

# HOUSE FULL

அரங்கு நிறைந்துவிட்டது

அரங்கினை நிறைத்து எங்கள் இதயங்களை நனைத்த
அன்பு நேயர்களுக்கு
ஆழ்ந்த நன்றிகள்
என்றும் அன்புடன் உங்களை நேசிக்கும்
இளையபாரதி

# YARLCAN STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

Tel: 724-9085
Pager : 600 -0335
Cell: 721-9709

## சூரியக்குடும்பம் 10 — விண்வெளி — தருபவர்- கனி

